# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in Email: registrar@tnteu.ac.in; Phone – 044 2838 9038


**Lr.No.TNTEU/R/Elig./B.Ed Admission 2018-19/1664** **Date: 18.08.2018**

முனைவர் நா.ரவீந்திரநாத் தாகூர்,Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்

முதல்வர்கள்,

இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து
அரசு/அரசு உதவிபெறும்/சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 – பி.எட் சேர்க்கை – பல்கலைக்கழக இணைவு பெற்ற அரசு/அரசு உதவிபெறும்/சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - பி.எட் சேர்க்கை முடித்த கல்லூரிகள் தகுதிக்கட்டணம் செலுத்துதல், அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் - கால அட்டவணை அறிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** இப்பல்கலைக்கழக கடித எண்:TNTEU/R/B.Ed Admission 2018-19/2018/ 1621, நாள் 07.08.2018.

-----

2018-2019-ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழக இணைவுடன் செயல்படும் அனைத்து அரசு/அரசு உதவிபெறும்/சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில், பி.எட் பட்டப்படிப்பில் சேர்க்கை பெற்ற மாணவ மாணவிகள், 2018-2019-ஆம் கல்வியாண்டுக்கான இப்பல்கலைக்கழக அட்டவணையின்படி (University's Academic Calender-2018-2019), **கடந்த 01.08.2018-ஆம் நாள் முதல் வகுப்புகள் துவங்கப்பட்டு முதலாமாண்டு பி.எட் மாணவ மாணவிகள் கல்லூரிகளுக்கு வருகை புரிந்து கொண்டுவருகின்றனர்.**

2018-2019-ம் கல்வியாண்டில், பி.எட் சேர்க்கையினை நிறைவு செய்த கல்வியியல் கல்லூரிகளுக்கு, 21.08.2018-ஆம் நாளிலிருந்து காலை 10 மணி முதல் பல்கலைக்கழகத்தில் அசல் சான்றிதழ் சரிபார்ப்புப் பணி தொடங்குகிறது. இதில் கீழ்க்கண்ட கால அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இயங்கும் கல்வியியல் கல்லூரிகள் அசல் சான்றிதழ்களுடன் நேரில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, அரசு/அரசு உதவிபெறும்/சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில் 2018-2019-ம் ஆண்டிற்குச் சேர்க்கை செய்யப்பட்ட அனைத்து மாணவர்களது விவரங்களையும் இப்பல்கலைக்கழக இணையதளத்தில் (www.tnteu.ac.in) ஏற்கனவே **பதிவேற்றம் செய்த** ஆவணங்களுடன் பல்கலைக்கழகத்திற்கு வந்து, அசல் சான்றிதழ்களைச் சரிபார்ப்புச் செய்தபின்பு, அச்சான்றிதழ்களை அன்றே பெற்றுச் செல்லுமாறு முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**(த.பி.பா.)**

**சரிபார்ப்புக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

1. சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களது தகுதிக்கட்டணம் (eligibility fee), (ஒரே வங்கி வரைவோலையாக (Single demand draft) எடுத்து அதன் பின்புறம் கல்லூரி எண், மொத்த மாணவர்களது எண்ணிக்கை விவரத்தைக் குறிக்கவும்).
2. மாணவர்கள் பூர்த்தி செய்த சேர்க்கைக் குழுவால் சரிபார்க்கப்பட்டு, முதல்வர் கையொப்பமிட்ட விண்ணப்பங்கள் ஒவ்வொன்றுடனும், முதல்வர் சான்றொப்பமிட்ட கல்வி, மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ் ஆதார் அட்டையின் நகல்கள் (Attested copies).
3. சேர்க்கை செய்யப்பட்ட அனைத்துத் தகுதியான மாணவர்களின் அசல் (original) கல்விச் சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ்கள், ஆதார் அட்டை.
4. மாணவர்களது விவரங்கள் பதிவேற்றம் செய்து, பின் இணையதளத்திலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியே பதிவு இறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (Individual online Admission Application Printouts)
5. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல் (Form-A)
6. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் தகுதிப் பட்டியல் (Form-B)
7. NCTE Regulation-2014 விதியின்படி, அண்மையில் வழங்கப்பட்ட அங்கீகார (Recognition) ஆணையின் நகல், கடைசியாக பல்கலைக்கழகத்திலிருந்து பெற்ற இணைவு/தொடர் இணைவு (Provisional / Continuation of Provisional Affiliation) ஆணையின் நகல்.

சுயநிதி கல்வியியல் கல்லூரிகளில் 2018-2019-ஆம் கல்வியாண்டிற்கான பி.எட் மாணவர் சேர்க்கையின் கடைசி நாள் குறித்த அறிவிப்பு, உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கில் வரும் தீர்ப்பின் அடிப்படையில் பின்னர் தெரிவிக்கப்படும்.

**அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்புக்கான கால அட்டவணை**

| **தேதி** | **சான்றிதழ் சரிபார்ப்புக்கான கல்லூரிகள் இயங்கும் மாவட்டங்கள்** |
|---|---|
| 21.08.2018 | கோயம்புத்தூர், தருமபுரி, கடலூர், புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு, மதுரை, விழுப்புரம், திருநெல்வேலி |
| 23.08.2018 | நாமக்கல், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, சேலம், வேலூர், தூத்துக்குடி, தேனி, சிவகங்கை, சென்னை, அரியலூர் |
| 24.08.2018 | திண்டுக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், திருவாரூர், விருதுநகர், இராமநாதபுரம், நீலகிரி, கரூர், பெரம்பலூர் |

18/8/18

**பதிவாளர் (பொ)**